**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**MCOP No: 46/2021**

2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் நாள் Pw 1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன்படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**ம.சா. 1(ராஜாராம்) நாள் 1.02.2024.**

**3,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் 21.12.2020 இரவு 8.30 மணிக்கு நடந்தது. நான் எந்த வாகனத்தில் எந்த திசை நோக்கி சென்றேன் என்றால் TVS XL வாகனத்தில் சிப்காட்லிருந்து என் வீட்டிற்கு செல்ல வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன். இரவு நேரம் என்பதால் நான் சரிவர கவனிக்காமல் தென்வடல் ரோட்டின் மேற்கு ஓரமாக பார்க்கிங் லேம்ப் எரியவிட்டு சாலைவிதிகளை பின்பற்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரி மீது மோதி விபத்தை நான் தான் ஏற்படுத்தனேன் என்றால் சரியல்ல. லாரி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை, நகர்ந்து கொண்டு தான் இருந்தது. நான் விபத்து சமயத்தில் குடி போதையில் இருந்ததாக நான் தாக்கல் செய்துள்ள மசாஆ 6 காயச் சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனக்கு குடிப்பழக்கமே இல்லை. எந்த மருத்துவமனையில் எனக்கு சிகிச்சை எடுக்கப்பட்டது என்றால் முதலில் சானிடோரியம் மருத்துவமனையில் முதல் உதவி கிசிச்சை பெற்று பின்னர் ஈரோடு டிரஸ்ட் மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்கு சேர்ந்தேன். எப்போது மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டடேன் என்றால் 31.12.2020 ல் டிஸ்சார்ஜ் ஆனேன். மசாஆ 7 ல் 28.12.2020 ல் விடுவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. நான் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரி. என் மீது தவறு இருந்ததால் தான் பின்னிட்டு யோசித்து

பொய்யான புகாரை 1ம் எதிர்மனுதாரர் மீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, விபத்து நடந்த உடன் மருத்துவமனை சென்று விட்டதால் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க முடியவில்லை. விபத்து சமயத்தில் நான் தலைக் கவசம் அணியாயததால் தான் தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, தலைக் கவசம் அணிந்திருந்தேன், அது கழன்று கீழே விழுந்து விட்டது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் தற்போது சரியாகிவிட்டது என்றால் சரியல்ல, கால்,கை எல்லாம் வலி உள்ளது, கேள்வி மற்றும் பார்வை குறைபாடு ஏற்பட்டுள்ளது. பார்வை குறைபாடு மற்றும் கேள்வி குறைபாடு ஏற்ட்டதாக மனுவிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றும் முதன் முறையாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நடக்க முடியவில்லை என்றும், முன்பு போல் வேலை செய்ய முடியவில்லை என்றும் கூறியிருப்பது எனது வயோதிகம் காரணமாக தான் என்றும் விபத்தினால் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதனால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். விபத்து சமயத்தில் நான் அதிக குடிபோதையில் ரோட்டின் ஓரமாக நின்றிருந்த லாரியை கவனிக்காமல் லாரியின் பின் பக்கம் மீது மோதி நானே தான் விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல, திடீரென்று எந்த சிக்னலும் இல்லாமல் லாரி ஓட்டுநர் நிறுத்தியதால் தான் என் வாகனம் லாரி மீது மோதி விபத்துக்குள்ளானது. விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் 3,4 எதிர்மனுதாரர்களிடம் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ 9 மெடிக்கல் பில்லில் கோவிட் டெஸ்ட் க்காக ரூ.2000/-மற்றும் எம்.எல்,சி க்காக ரூ.2000 திரும்பப் பெற தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சிப்காட்டில் இரவு காவலராக வேலை செய்து மாதம் ரூ.20000 சம்பாதித்து வந்தேன் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அவ்வாறு நான் வேலை செய்து

சம்பாத்தியம் பெறவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் எந்த வேலையும் செய்யவில்லை என்றும் , மனுவில் நான் வேலை செய்வதாக சொல்லும் கம்பெனியின் விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.3,4 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் இழப்பீடு கோர வேண்யிருந்தால் அதனை 5,6 எதிர்மனுதாரர்களிடம் தான் கோர முடியும் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishnapriya, 1.2.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS